## திராவிட இயக்க இதழ்கள் - ‘புதிய சிந்தனையாளன்’




பெரியார் பற்றாளர் வே.ஆனைமுத்து அவர்கள் 2018-இல், தான் நடத்தி வந்த ‘சிந்தனையாளன்’ இதழின் வெளியீட்டு உரிமையைத் தனது கட்சிக்கே ஓர் உறுதிமொழி ஆவணம் வாயிலாக, எழுதிக் கொடுத்துவிட்டார்.

பிறகு அந்த இதழின் உரிமத்தை மார்க்சிய பெரியாரிய பொதுவுடமைக் கட்சிப் பெயருக்கு மாற்ற விண்ணப்பிக்கப் பட்டது. ஆனால், அந்தக் கட்சி பதிவுபெற்ற கட்சி அல்ல என்று புதுடெல்லியில் உள்ள செய்தி ஏடுகளுக்கான பதிவாளர் உரிமையை மாற்றித் தர மறுக்கப்பட்டது. அதனால், இதழின் வெளியீட்டு உரிமை, கட்சியின் பெயருக்கு, மாற்ற இயலாமல் போனது. இந்நிலையில் 2021-ஆம் ஆண்டு ஏப்ரல் 6 அன்று ஆனைமுத்து இறந்துவிட்டார்.

அதைத் தொடர்ந்து அவரது குடும்பத்தினர் ‘சிந்தனையாளன்’ என்ற பெயரிலேயே இதழைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், அந்த இதழில் பணியாற்றியவர்கள் தனியே பிரிந்து வந்து, பெரியாரிய செயற்பாட்டாளர் வாலாசா வல்லவன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ‘புதிய சிந்தனையாளன்’ இதழ் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளிவந்து கொண்டிருக்கிறது.

‘சிந்தனையாளன்’ இதழ் போன்றே ‘புதிய சிந்தனையாளன்’ இதழும் மார்க்சிய பெரியாரிய சிந்தனைகளைத் தாங்கி வரும் அலசல் கட்டுரைகளுக்கு இடமளிக்கிறது.

## :ப்ளாஷ்பேக்





ம.வெற்றிவேல்

### சிறுமலர் இல்லத்தில் தலைவர்!

1987-ஆம் ஆண்டு சென்னை, மாதவரத்தில் இயங்கிய ஈடன் மெட்ரிக்குலேஷன் பள்ளியின் சார்பில், அப்பள்ளியின் முதல்வர் இரா.உதய பாஸ்கர் என்பவரால், அண்ணா மேம்பாலம் அருகில் உள்ள ‘சிறுமலர் பார்வையற்றோர் பள்ளி’யில் பயிலும் குழந்தைகளுக்கு வடை, பாயாசத்துடன் கூடிய அறுசுவை உணவு அன்றைய கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கரங்களால் வழங்கப்பட்டது. தலைவர் கலந்துகொண்டு அறுசுவை உணவு வழங்கியதுடன், “தலைமைக் கழகத்தின் சார்பில் தலைவர் என்ற முறையில் ரூ.10 ஆயிரத்தை பள்ளிக்கு நன்கொடை அளிக்கிறேன்” என்று கூறி வழங்கினார். அந்நிகழ்ச்சியில் என்.வி.என்.சோமு, மிசா ஆர்.கணேசன், ஆர்.டி.சீத்தாபதி, செங்கை சிவம், டி.கே.பழனிசாமி போன்ற கழகத்தினர் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். அப்போது, 17 வயது இளைஞனாக கொடுங்கையூர் 1-வது வட்ட இளைஞர் அணிச் செயலாளராக இருந்த நானும், இந்நிகழ்வில் பங்கேற்று புகைப்படம் எடுத்துக்கொண்டேன்.

– ம.வெற்றிவேல் எம்.ஏ.,
76 ‘அ’ வட்டத் துணைச் செயலாளர், சென்னை கிழக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நீடித்த திராவிட இயக்கம்!

1937-ஆம் ஆண்டுத் தேர்தலில் தோல்வியைச் சந்தித்த நீதிக்கட்சி, முழுவதும் சிதையத் தொடங்கியது. 1937-ஆம் ஆண்டுக்குப் பின்னர், தலைமைப் பதவியை பெரியார் ஏற்றுக்கொண்டார். திராவிட இனக் கொள்கையுடன், சுய மரியாதை இயக்கத்தை நடத்தி வந்த பெரியார், நீதிக் கட்சியின் வீழ்ச்சியையும் கடந்து திராவிட இயக்கத்தை நிலைத்திருக்க வைத்தார்.

# மாநாடு

ர.பிரகாசு **36**

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...

ஓவியம் : சிகரன்




## குலக்கல்வி ஒழிந்தது!

கல்வியில் இருந்து ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிப்பதுதான், பா.ஜ.க.வின் புதிய கல்விக்கொள்கையின் நோக்கம். ஆனால், இது மிகவும் பழைய கல்விக்கொள்கை. இதே பெயரில், 1953-ஆம் ஆண்டு ராஜாஜி ஆட்சிக் காலத்திலும் ஒரு கல்விக் கொள்கை வகுக்கப்பட்டது. பள்ளி நேரத்தை 3 மணி நேரமாகக் குறைத்துவிட்டு, எஞ்சிய நேரத்தில் குழந்தைகள் பெற்றோர் தொழிலைச் செய்ய வேண்டுமாம்! அதற்கு திராவிட இயக்கம் சூட்டிய பெயர் ‘குலக்கல்விக் கொள்கை’.

ராஜாஜியின் சூழ்ச்சியைப் புரிந்துகொண்ட தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் இந்தித் திணிப்புக்கு எதிராக கிளர்ந்தெழுந்ததை விட, ஒருபடி அதிகமாகவே வீறுகொண்டு எழுந்தனர். அதில் அண்ணாவின் கிளர்ச்சி முழக்கம் வெளியானது, 1953- ஆம் ஆண்டு ஜூலை 4, 5-இல் சிதம்பரத்தில் நடைபெற்ற தி.மு.கழகத்தின் தென்னாற்காடு மாவட்ட இரண்டாவது மாநாட்டில்.

மாநாட்டில் இரண்டு நாள்களும் அண்ணாவின் ‘காதல் ஜோதி’, ‘சந்திரோதயம்’ நாடகங்கள் நடந்தன. மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவராக இரா.பாலகுருசாமியும், மாநாட்டுச் செயலாளர்களாகத் தில்லை வில்லாளன், இரா.சக்கரவர்த்தி ஆகியோரும் பணியாற்றினர்.

**தி.க., தி.மு.க.வின் போராட்டங்கள் ராஜாஜிக்குக் கடும் நெருக்கடியைத் தந்தன. பதவியை விட்டு விலகி பின்வாங்கினார், ராஜாஜி. குலக்கல்வி ஒழிந்தது.**

முதல் நாள் மாநாட்டுக்கு, க.அன்பழகன் தலைமை தாங்கினார். சி.வி.எம். அண்ணாமலை மாநாட்டைத் திறந்துவைத்தார். இரண்டாவது நாள் மாநாட்டிற்கு சி.பி.சிற்றரசு தலைமை தாங்க, அரங்கண்ணல் திறந்து வைத்தார்.

கலைஞர், நாவலர், ஈ.வெ.கி.சம்பத், கே.ஏ.மதியழகன், என்.வி.நடராசன், ஏ.வி.பி.ஆசைத்தம்பி, இராமாமிர்தத்தம்மையார், சத்தியவாணிமுத்து, உள்ளிட்டோர் எழுச்சியுரை ஆற்றினர். மாநாட்டின் கலைக்காட்சியை எம்.ஜி.ஆர். திறந்து வைத்தார். திரைத்துறையில் கோலோச்சிய தி.மு.க. ஆதரவாளர்கள் பலரும் சொற்பொழிவாற்றினர்.

ஏற்கெனவே, திருச்சி மாவட்ட இரண்டாவது மாநாட்டில் ‘கல்லக்குடிப் போராட்ட’ அறிவிப்பை வெளியிட்டிருந்த அண்ணா, போராட்டக் களத்தில் கழக வீரர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற அறிவுரைகளை வழங்கினார். “ஜூலை 15-இல், இரயில் நிறுத்தக் கிளர்ச்சி, தூய்மை நிரம்பியதாக இருத்தல் வேண்டும். இரயில்வே சொத்துக்களுக்குச் சிறிதளவும் சேதம் இருத்தலாகாது. சொத்து நம்முடையது. என்போர் சார்பிலே பாடுபடுபவர் நாம் என்பது நினைவில் இருத்தல் வேண்டும். பொதுமக்களிடம் இந்த இரயில் நிறுத்தம், ஏன் என்பது பற்றி விளக்குதல் வேண்டும்” என்றார்.

தொடர்ந்து பேசிய அண்ணா, ராஜாஜியின் குலக்கல்வித் திட்ட சூழ்ச்சிகளைக் கட்ட விழ்த்தார். ராஜாஜியின் வீட்டு முன்பாக, ஜூலை 13-ஆம் தேதி ஈ.வெ.கி.சம்பத் தலைமையில், மறியல் தொடங்கப்படும் என்று அறிவித்தார். “மறியலுக்கு சுமார் 50 தொண்டர்கள் தேவைப்படுவர். ஆச்சாரியார் உத்தரவு பிறப்பித்து, தோழர் சம்பத்தையும் அவருடன் செல்லும் தோழர்களையும் தாக்கி, இரத்தத்தைச் சிந்த வைத்து, அதையே நமது நெற்றிக்குத் திலகமாகத் தரித்துக்கொண்டு, சட்டசபை சென்று கொலுவிருக்கட்டும்.

இரத்தக்கறை படிந்த மனத்தோடு, அவர் நாட்டை ஆளட்டும். அவர் கொண்டு வந்து திணித்திருக்கும் கல்வித் திட்டம் இந்தியைவிடக் கொடுமையானது. எனவே, அதைப் போக்க இந்தி எதிர்ப்புக் காலத்திலே நாம் தந்த பலிகளைவிட, அதிகமாகத் தந்தாதல் வேண்டும்” என்றும் ஆணையிட்டார், அண்ணா.

அண்ணா, ஈ.வெ.கி.சம்பத், நாவலர், என்.வி.நடராசன், கே.ஏ.மதியழகன் ஆகியோர் தி.மு.க. அலுவலகத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர். அன்னை சத்தியவாணி முத்து தலைமையில் 40 பேர் கொண்ட படை மறியலுக்குப் புறப்பட்டது. அவர்களும் கைது செய்யப்பட்டனர். தி.க., தி.மு.க.வின் போராட்டங்கள் ராஜாஜிக்குக் கடும் நெருக்கடியைத் தந்தன. பதவியை விட்டு விலகி பின்வாங்கினார், ராஜாஜி. குலக்கல்வி ஒழிந்தது.


...கூட்டம் திரளும்

# பாசறை படிப்பகம்

கௌதம் ராஜ் **36**

“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

## வரலாற்றை மாற்றலாமா?




‘தமிழ்நாடு நாள்’ பற்றிய விவாதம், ‘தமிழ்ப் புத்தாண்டு’ விவாதத்தைப் போலவே நீண்டு கொண்டுச் செல்கிறது. அரசாணை வெளியிடப்பட்ட பிறகும், ஜூலை 18-ஐ தமிழ்நாடு நாளாக ஏற்றுக் கொள்வதில் பலருக்கும் தயக்கம் இருக்கவே செய்கிறது. இரண்டு தரப்பினரிடமும் பல்வேறு வாத பிரதிவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. தர்க்கப்பூர்வமான கேள்விகளுக்கும் உண்மையைத் தெரியப்படுத்தும் தரவுகளுக்கும் எதிர்த்தரப்பினரிடம் இருந்து முறையான பதில் கிடைப்பதே இல்லை. இந்த நிலையில், ஜூலை-18 ஐ ‘தமிழ்நாடு நாளாக’ ஏன் கொண்டாடுகிறோம் என்பதற்கான காரணங்களை அறிந்து கொள்வது அவசியமாகிறது. செய்தி மக்கள் தொடர்புத் துறை வெளியீடாக ‘தமிழ்நாடு நாள் ஜூலை-18’ பற்றிய அரிய தொகுப்பு, 2022-ஆம் ஆண்டு சிறப்பு மலராக வெளியானது.

**தமிழ்த்தாய் வாழ்த்து, மாநிலத்திற்கு, தமிழ்நாடு என்ற பெயர், தமிழ்நாடு நாள் எனத் தொடர்ந்து வரும் அடையாள ரீதியிலான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள இந்தச் சிறப்பு மலர் ஒரு கையேடாகவே பயன்படும்.**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது வாழ்த்துரையுடன் தொடங்கும் இந்த நூல், ஜூலை 18 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானம், கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் வெளியிட்ட தமிழ்நாடு நாள் அறிவிப்பு, தமிழ்நாடு குறித்து தலைவர்களின் முழக்கங்கள் மற்றும் மேற்கோள்கள், அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள், ஆய்வாளர்களின் கருத்துரைகள், செய்தித் தாள் ஆவணங்கள் எனக் கலவையான கருத்துக்கள் அடங்கிய தொகுப்பாக வெளியாகி இருக்கிறது இந்த சிறப்பு மலர்.

தமிழ்நாட்டின் பெயரையே மாற்றத் துடிக்கும் ஒன்றிய அரசின் ஏவலர்கள் ஒருபுறமும், ‘தமிழ்க் காவலர்கள்’ என்று சொல்லிக்கொண்டே தமிழ்நாட்டிற்குப் பெயர் சூட்டப்பட்ட நாளை தமிழ்நாடு நாள் என்று கொண்டாட மறுப்பவர்கள் மறுபுறமும் உருவாகி இருக்கும் சமயத்தில், இந்தப் புத்தகம் இவர்கள் இருவரையும் எதிர்கொள்ளும் பேராயுதமாகப் பயன்படுகிறது.

மொழி மீது கொண்ட பற்றின் காரணமாக உயிரை மட்டுமல்ல, உடலையும் தீக்கிரையாக்கி தியாகம் செய்தவர்கள் தமிழர்கள். நடராசன், தாளமுத்து தொடங்கி, கீழப்பழூர் சின்னசாமி வரை மொழிப் போர் ஈகியரின் வரலாறு நீண்ட நெடியது.

‘மதராசு மாநிலம்’ என்று அழைக்கப்பட்ட பகுதிக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டச் சொல்லி, 76 நாள் உண்ணா விரதமிருந்து 1956-ஆம் ஆண்டு உயிர் நீத்தார் தியாகி சங்கரலிங்கனார். 11 ஆண்டுகள் கழித்து பேரறிஞர் அண்ணா அவர்களால் 1967-ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு பெயர்மாற்றத் தீர்மானம்தான் தாய் நிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயரைப் பெற்றுத் தந்தது.

இப்படி மொழி உரிமைக்காக நீண்ட நெடிய வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட மண் நம் தமிழ் மண். இம்மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் மொழி உரிமைப் போராட்டங்களின் நியாயங்களையும் தர்க்கங்களையும் நம் முன் எடுத்து வைக்கின்றன.

தமிழ்த்தாய் வாழ்த்து, மாநிலத்திற்கு, தமிழ்நாடு என்ற பெயர், தமிழ்நாடு நாள் எனத் தொடர்ந்து வரும் அடையாள ரீதியிலான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள இந்தச் சிறப்பு மலர் ஒரு கையேடாகவே பயன்படும்.

(தமிழிணையம் மின்னூலகத்தில் இலவசமாகப் படிக்கக் கிடைக்கிறது.)


நூலை வாசிக்க...

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**650**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131